**செய்தி வெளியீடு எண்: 037** **நாள்: 14.01.2019**

# தமிழ் வளர்ச்சித்துறை திருவள்ளுவர் திருநாள் 2019 – விருதுகள் அறிவிப்பு

ஒவ்வொரு ஆண்டும் திருவள்ளுவர் திருநாளையொட்டித் தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாய உணர்வுக்கும் தொண்டாற்றி பெருமைசேர்த்த தமிழ்ப் பேறறிஞர்கள் மற்றும் தன்னலமற்றத் தலைவர்கள் பெயரில், தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ள கீழ்க்கண்ட திருவள்ளுவர் விருது உள்ளிட்ட ஒன்பது விருதுகளைப் பெறத் தகுதியானவர்களை மாண்புமிகு அம்மாவின் அரசு அறிவிக்கும். அதன்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி திரு.கே.பழனிச்சாமி அவர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ளவர்களைத் தேர்வுசெய்து அறிவித்துள்ளார்கள்.

**விருதுகள் பெறுவோர்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவள்ளுவர் விருது – 2019 | : | திரு எம். ஜி. அன்வர் பாட்சா |
| 2. | தந்தை பெரியார் விருது – 2018 | : | திரு. சி. பொன்னையன் |
| 3. | அண்ணல் அம்பேத்கர் விருது – 2018 | : | மருத்துவர் சி. இராமகுரு |
| 4. | பேரறிஞர் அண்ணா விருது – 2018 | : | பேராசிரியர் மு. அய்க்கண் |
| 5. | பெருந்தலைவர் காமராசர் விருது – 2018 | : | திரு. பழ. நெடுமாறன் |
| 6. | மகாகவி பாரதியார் விருது – 2018 | : | பாவரசு திரு. மா. பாரதி சுகுமாரன் |
| 7. | பாவேந்தர் பாரதிதாசன் விருது – 2018 | : | கவிஞர் தியாரூ |
| 8. | தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது – 2018 | : | முனைவர் கு. கணேசன் |
| 9. | முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது – 2018 | : | சூலூர் கலைப்பித்தன் |

மேற்காணும் விருதுகளை திருவள்ளுவராண்டு 2050, தை 7ஆம் நாள், 21.01.2019 திங்கள்கிழமை அன்று மாலை 04.30 மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறும் திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடி திரு.கே.பழனிசாமி அவர்கள் வழங்குகிறார்கள். விருது பெறுவோர் ஒவ்வொருவருக்கும் 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் விருக்கான தகுதிச் சான்றிதழ் ஆகியன வழங்கி பொன்னாடை அணிவித்துச் சிறப்பிக்கப்படும்.

இவ்விழாவில் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 92 பேருக்கு அவர்கள் வாழ்நாள் முழுவதும் திங்கள்தோறும் உதவித்தொகை ரூ.2,500/– மற்றும் மருத்துவப்படி ரூ.500/– பெறுவதற்கான அரசாணைகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அளிக்கப்பெறும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**